இங்கு எடுத்துக்கொள்ள முடியாத சூழ்நிலையில், இந்தப் பிரச்சினையின் அவசர முக்கியத்துவம் கருதி, இந்த அறிவிப்பைச் செய்கின்றேன். இந்த வீட்டினுடைய சொந்தக்காரரர் ஏற்கெனவே இறந்துவிட்ட காரணத்தினால், பிள்ளையற்ற சொத்து என்ற முறையில், வளர்ப்பு மகன் ஒருவன் இந்த வீட்டைப்பெற்று, பழுது பார்க்காது இருந்துவிட்ட காரணத்தால் அது இடிந்து விழுந்து இத்தகைய விபத்து ஏற்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் மாண்டுவிட்ட 9 வயது நிரம்பிய சங்கீதா, 8 வயது நிரம்பிய அஜீமா, 7 வயது நிரம்பிய சித்திக் ஆகிய இந்த 3 குழந்தைகளின் சாவுக்காக அந்தக் குடும்பத்திற்குத் தலா 5 ஆயிரம் ரூபாய் வீதம் 15 ஆயிரம் ரூபாய் அரசின் சார்பாக வழங்கப்படுகிறது. காய முற்ற கைரூன், வகிலா பானு, நபீசா, ரமேஷ், வசந்தா, கவுரி ஆகியவர்களுக்கு சிகிச்சை செலவுக்காக தலா 500 ரூபாய் வீதம் 3 ஆயிரம் ரூபாய் அரசின் சார்பில் வழங்கப்படுகிறது(குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ்.டி. உகம்சந்த் அவர்களும், திரு. ஆர். சிங்காரம் அவர்களும் கவன ஈர்ப்புத் தீர்மானம் தந்திருப்பதாக நம்முடைய கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள். ஆகவே, அதுவும் அவைக் குறிப்பில் இடம்பெறுகிறது.

4. அறிக்கை அளித்தல்

அரசு உறுதிமொழிக் குழு.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–90ஆம் ஆண்டுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் மூன்றாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

5. மானியக் கோரிக்கைகள், 1990-91—விவாதமும் வாக்கெடுப்பும் —தொடர்ச்சி

கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிருவாகமும்—தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: —

''மானியக் கோரிக்கை எண்.28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிருவாகமும் — என்ற தலைப்பின்கீழ் ரூ. 224,86,92,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''